Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 4-2-1985 திங்கள் கிழமை (தை 22-ஜ அவ்13) முழக்கம் 194

## நாளை 'ஈழமுரசு'வின் முதலாவது பிறந்த நாள்

உங்கள் அபிமான தினசரி ஈழமுரசு நாளை தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளது கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 5ம் திகதி 'ஈழமுரசு'வின் முதலாவது இதழ் வெளியானது. நாட்டு நிலைமையை மனதில் கொண்டு ஆடம்பரமெதுவுமின்றி அடக்கமாக 'ஈழமுரசு' தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடும். சமய, சமூக, அரசியல் தலைவர்களின் வாழ்த்துக்களும், ஆசிச்செய்திகளும், நாளைய ஈழமுரசில் பிரசுரமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ராஜீவின் பிள்ளைகள் பாதுகாப்பு காரணத்தால் பாடசாலை செல்வதிலிருந்து நிறுத்தப்பட்டனர்

(புதுடில்லி)

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் புதல்வன் ராஹுல் மகள் பிரியங்கா ஆகிய இருவரது உயிருக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பாரதப் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் உளவறியும் அதிகாரிசளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, இவர்களின் ஆலோசனைக்கிணங்க ராஹுல், பிரியங்கா ஆகிய இருவரும் தமது புதுடில்லிப் பாடசாலைகளுக்குக் கல்வி கற்கச் செல்வதிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் தமது வீட்டிலிருந்தே படிப்பார்கள் என்றும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மட்டும் பாடசாலைக்குச் செல்வார்கள் என்றும் மேற்படி பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. இவர்கள் பாடசாலைக்குச் செல்வது ஆபத்தை விளைவிக்கும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இவர்கள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மோட்டார் கார் விபத்தொன்றில் சிக்கியபோது இவர்கள் சிறு காயமடைந்தனர். அதுவும் கூட திட்டமிட்ட ஒரு செயல் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் உடனடியாக அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வரை ரயில் சேவைகள் வியாழன் முதல் நடைபெறலாம்!

## பெருந்தொகை ஆசிரியர், அரச ஊழியர் வேலைக்குச் செல்லமுடியாது தவிக்கும் நிலை

முறிகண்டி கண்ணிவெடி விபத்தையடுத்து அனுரதபுரம் வரை நடத்தப்பட்டுவரும் கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் சேவையை எதிர் வரும் ஏழாம் திகதி வியாழக்கிழமை முதல் வவுனியா வரை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த முறிகண்டிக்கும் மாங்குளத்துக்கும் இடையிலான ரயில் பாதையும் தற்போது முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பொது மக்கள் கொழும்பு பிரயாணத்தை மேற்கொள்வதில் தற்போது அனுபவித்து வரும் இன்னல்களை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால அட்டிகலக்கு விளக்கியதைத் தொடர்ந்து வியாழக்கிழமை முதல் தற்போது அனுராதபுரம் வரை நடத்தப்படும் ரயில் சேவையைவுனியாவரை நடத்துவதற்குநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு கவுன்சில் இதற்கான அனுமதியை ஏழாம் திகதிக்கு முன்னர்

—4ம் பக்கம் பார்க்க

## 51 பூஸா இளைஞர்கள் 7ம் திகதி வருகின்றனர்

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் மேலும் 51 இளைஞர்கள் எதிர் வரும் 7ம் திகதி வியாழக்கிழமை விடுதலை பெற்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்கள்.

6ம் திகதி புதன் கிழமை பூஸாவிலிருந்து கொழும்பு கொண்டுவரப்படும் இவர்கள் அங்கிருந்து 7ம் திகதி காலை யாழ்தேவி மூலம் அனுரதபுரம் வரை அனுப்பிவைக்கப்படுவர்.

இவர்களை அனுரதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் கொண்டு விடுவதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து 6ம் திகதி காலை பல்கலைக்கழக மாணவர்களைப் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு ஏற்றிச் செல்லும் விசேஷ பஸ், 7ம் திகதி அனுரதபுரம் சென்று 51 பூஸா இளைஞரையும் ஏற்றிவரும்.

## மீண்டும் அந்தச் சத்தம்

குடாநாட்டின் பல பாகங்களிலும் முன்னர் அடிக்கடி கேட்டுவந்த அந்தக் குண்டுச் சத்தங்களும், வேட்டுச் சத்தங்களும் நேற்றுக் காலையிலிருந்து நள்ளிரவு வரை பல பகுதிகளிலும் விட்டு விட்டுக் கேட்டது

## சர்வகட்சி மாநாடு தோல்வி; அடுத்த கட்டம் என்ன? பிரிட்டனில் மந்திரி ஹமீத் விளக்கம்

(லண்டன்)

இலங்கையில் சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்ததனையடுத்து, அரசாங்கம் அடுத்து எடுக்கவுள்ள நடவடிக்கை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ ஸீ எஸ். ஹமீத் பிரிட்டிஷ் அரசாங்கத் தலைவர்களுக்கு எடுத்துரைத்துள்ளார். நேற்று முன்தினத்துடன் தனது பிரிட்டிஷ் விஜயத்தை அவா முடித்துக் கொண்டார்.

தீவிரவாதிகளால் எதிர் நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகளையும் அவர் பிரிட்டிஷ் தலைவர்களிடம் விளக்கினார், சர்வகட்சி மாநாட்டு யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்காதது குறித்தும் குறிப்பிட்டார். இம்மாநாடு தோல்வியடைந்ததற்கான பல்வேறு காரணங்கள் குறித்தும் ஹமீதால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் எம். பிக்கள் செய்தி, தகவல் ஸ்தாபனங்கள் வர்த்தகப் பிரதிநிதிகள், பிரிட்டிஷ் பிரஜைகள் ஆகியோரையும் ஹமீத் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை குறித்து வெளிப்படுத்தினார் என்றும்தெரிவிக்கப்பட்டது

## யாழ் - பருத்தித்துறை சகல பஸ் சேவைகளும் ரத்தானது

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு சேவையிலீடுபட்டு வந்த 750 751ம் இலக்க பஸ்சேவைகள் அனைத்தையும் வடபிரதேச போக்குவரத்துச்சபை நேற்று முதல் ஒத்திவைத்துள்ளது பஸ் பாதைகள் குண்டு வெடிப்பால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலிருப்பதே இதற்குக் காரணமாகும்.

—4-ம் பக்கம் பார்க்க

## சீஸன் டிக்கட் விற்றபணம் பஸ் நிலையத்தில் கொள்ளை

யாழ். பஸ்நிலைய சீஸன் ரிக்கற் விற்பனைப் பகுதியில் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் புகுந்த நாலவர் அங்கிருந்த சீசன் ரிக்கற் விற்பனைப்பணம் ஆறுயிரம் ரூபாவைக்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் இதனால் இம்மாத சீசன் ரிக்கற் விற்பனை தொடர்ந்து நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

—4-ஆம் பக்கம் பார்க்க

## ஒரு உளவாளி ஒப்புதல் வாக்குமூலம்: ஐம்பது ரூபா லஞ்சத்துக்கு பத்திரங்களை விற்றாராம்

(புதுடில்லி)

உளவுக் குற்றச்சாட்டில் கைதான சங்கரன் என்ற அதிகாரி தான் இரகசியத் தகவல் கோப் பணத்துக்கு விற்று வந்ததாக ஒப்புக்கொண்டார்,

இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங்கின பத்திரிகைத் தொடர்பதிகாரியின் உதவியாளராக இவர் கடமையாற்றினார்.

வர்த்தகர் ஒருவரிடம் ஐம்பது

—4-ம பக்கம் பாாக்க

## கணவனை விடுதலை செய்யுமாறு மனைவி உருக்கமான வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

கடத்தப்பட்ட தமது கணவரை எந்தத் தீங்கும் விளைவிக்காது, விடுதலை செய்யுமாறு முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி நீட்டா பெர்ளுன்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு பிரஜைகள் குழுவின் உறுப்பினரான திரு லியோ பெர்ளுன்டோ ஒரு வாரத்திற்கு முன்னர் தமது மகனுடன் சேர்த்து இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டது தெரிந்ததே.

நீண்ட காலமாக இங்கு வர்த்தகம் செய்து வரும் தமது கணவர் தமிழ் மக்களுடன் மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தவரென்றும், தமிழ் மக்களும் தங்களைச் சகோதரர்கள்போலவேமதித்து வந்ததாகவும் தெரிவித்துள்ள திருமதி. நீட்டா பெர்ளுன்டோ, தமது கணவரைக் கடத்தியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மனிதாபிமானத்தின் பேரில் விடுவிக்குமாறும் கேட்டுள்ளார்.

தமது கணவர் எவருக்கும் எப்போதும் எந்தத் தீங்கும் விளைவிக்கவில்லை எனவும் இவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார் முல்லைத்தீவு பிரஜைகள் குழுவும் துண்டுப் பிரசுரம் மூலம் விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## குண்டு வைத்து பாதை தகர்ப்பு

அச்சுவேலிப் பகுதியில் தொண்டமானாறு வீதி வளலாய், இடைக்காடு ஆகிய பகுதிகளில் நேற்று முன் தினமிரவு பல பாதைகள் இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துக் தகர்க்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய வானொலி செய்தி இது

பருத்தித்துறைக்கு அருகிலுள்ள பொலிகண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் இருபது பேர் கொல்லப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் கூறுவதாக இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

# கல்வியை பாழ் படுத்தும் நடவடிக்கைகள்; யாழ்மாணவர் பிரதிநிதிகள் குழு கண்டனம்!

மாணவர்களின் கல்வியைப் பாழ்படுத்தும் நோக்குடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ் மாணவர்கள் பிரதிநிதிகள் குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது இவ்வறிக்கையின் பூரண விபரமும் வருமாறு:-

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையை குழப்பிய விசமத்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இரண்டு வருடங்கள் எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் கல்வி கற்று அதன் முடிவை ஒரு கேள்விக் குறியாக்கி இன்று பரீட்சை நடக்குமா எப்போது நடக்கும் என மனம் குழப்பிய நிலையில் விரக்தியடைந்து இருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் நிலையை சிந்தித்துப் பாருங்கள். யாமே எமக்கு இவ் அழிவு நிலையை ஏற்படுத்தி எமது சந்ததியினரை புத்திஜீவிகள் அற்றநிலைக்குத்தள்ளி இறுதியில் கல்வியில்லா பாழ்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்தப் போகிறீர்களா? கல்விக்கு பெயர்போன யாழ்ப்பாணத்தில் ஒருபக்கம் அரச ராணுவத்தினால் கல்வி பயில முடியாது துடிக்கும் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ் பாடசாலைகள் மறுபக்கம் படித்த படிப்பை முடிக்க முடியாத நிலையை ஏற்படுத்தும் ஒரு சில இயக்கங்கள்.

மாணவர்களைப் பொறுத்த வரை கல்வியை மூழ்கடிக்க பலர் முயன்றாலும் அதை எதிர்த்தே தீருவார்கள் என்பதை பாடசாலையில் பரீட்சையை குழப்பச் சென்றவர்களுக்குச் சில இடங்களில் மாணவர்களின் பதில் அடிகளில் இருந்து புரிந்துகொள்ள முடியும்.

எனவே சமுதாயத்திற்கு அன்றும், இன்றும், என்றும் அழிக்கப்பட முடியாத கல்விச் செல்வத்தை இனிமேலும் பாழ்படுத்த எவரும் முயல வேண்டாம் எனவும், அத்துடன் ஒரு நாட்டில் கல்வி, விவசாயம் இரண்டும் அழிக்கப்படுமாயின் அச்சமுதாயம் அழிந்துவிடும் என்ற அறிஞர்களின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்தும் இனிமேல் எந்த சூழ்நிலையிலும் பரீட்சை நடந்தாலும் அதனை நாம் நிராகரிக்காது பரீட்சைக்கு சமூகம் அளிக்க சகல மாணவர்களுக்கும் இயக்கங்கள் பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குமாறும் யாழ் மாணவர் பிரதிநிதிகள் குழு சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.




✳ பருத்தித்துறை, அருள்லிங்கம் பிரேமா தம்பதிகளின் மகள் சுஜீவா இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ புதுக்குடியிருப்பு, யேசுராசா சந்திராதேவி தம்பதிகளின் மகள் எவிஸ் சுவிற்ரு இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ மிருசுவில் உசன் கந்தையா பாக்கியம் தம்பதிகளின் மகன் மகிந்தன் இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ நல்லூர், சண்முகராசா வடிவாம்பாள் தம்பதிகளின் மகள் கௌசிகா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கிளிநொச்சி ஜெயந்திநகர், கருணானந்தமூர்த்தி யோகராணி தம்பதிகளின் மகன் வசந்தன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## பாடசாலைகள் மாதாந்தம் அறிக்கை அனுப்ப வேண்டும்

(ஏழாலை)

பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தும் புதிய ஆண்டில் திறமையாக இயங்குகின்றன என்பதனை உறுதி செய்யும் வகையில் அதிபர்களிடமிருந்து மாதாந்தம் மேற்பார்வை அறிக்கைகளை யாழ் கல்வித் திணைக்களம் கோருகின்றது

ஒவ்வொரு மாதமும் மூன்றாந் திகதிக்கு முன்னதாக முந்திய மாதத்தின் மேற்பார்வை அறிக்கைகளை வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அதிபர்கள் அனுப்பி வைக்க வேண்டும். இதன் மூலம் பாடசாலைகளின் நிர்வாகத்தையும், அதிபர், ஆசிரியர்கள் செயற்பாடுகளையும் கல்வித்திணைக்களம் அவதானித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இத்துடன் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் பாடசாலைகளின் கட்டடத் தேவைகள், தளபாடத் தேவைகள், விளையாட்டு முயற்சிகள், பெருந் திருத்த வேலைகள் என்பன குறித்தும் போதிய தகவல்களை அதிபர்களிடமிருந்து பிரதேச கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

## முன்னணியின் வேண்டுகோள்

பல சட்டங்களால் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகின்றனர். தமிழ் மக்களது அன்றாட வாழ்வு சீரழிந்துள்ளது தமிழ் மக்கள் வடபகுதியில் இன்று பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர் இந்நிலையில் சுதந்திர நாளான பெப்ரவரி 4ம் திகதி தமிழினத்தின் சுதந்திரதினம் பறிக்கப்பட்ட நாள். இந்நாளைத் தமிழினம் துக்கநாளாக, கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டும் தமிழினம் தமது எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக சகல இடங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் மத வழிபாட்டிடங்களில் விடுதலைக்கு பிரார்த்தனை செய்யுமாறும் தமிழீழ விடுதலை அணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## புங்குடுதீவில் இளைஞர் ஆண்டு செயற்திட்டங்கள் இரண்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி இரு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு த. துரைசிங்கம் தலைமையில் செயற்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இளம் ஆசிரியர்கள், சிரேட்ட மாணவர் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இதன் அமைப்பாளராக ஆசிரியர் திரு ச. சதாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர், யுவதிகளின் நலன் கருதி கைப்பந்தாட்ட வலைப்பந்தாட்ட மைதானங்களை அமைத்தல், அவற்றிற்கான உபகரணங்களைச் சேகரித்தல் ஆகியன முதலாவது செயற்றிட்டமாக இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப வித்தியாலயத்தில் நிலவும் இடநெருக்கடியைப் போக்கும் பொருட்டு 60 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட தற்காலிக கட்டடமொன்றை அமைத்தல் இரண்டாவது செயற்றிட்டமாகும்.

இவ்விரு திட்டங்களையும் நிறைவேற்றுதற்கு உதவுமாறு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் பிரஸ்தாப செயற்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

## நிர்வாகிகள்

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையத்தின் 1985ம் ஆண்டுக்கான தலைவராகத் திரு. எஸ். ரி. பத்மநாதனும், பொதுச் செயலாளராக எஸ். கே. சண்முகலிங்கமும், பொருளாளராகக் கே. ராஜநமாரும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

## நிர்வாகிகள்

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவராகத் திரு அ. இராசரத்தினமும், செயலாளராக திரு பி. சசீதரனும், பொருளாளராகத் திரு. க. கோணேசலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 6 ஆண்டுகளாக ஏழாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

(ஏழாலை)

ஆசிரியர் பற்றாக்குறை ஏழாலையிலுள்ள பல பாடசாலைகளில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக நிலவுகின்றது.

ஏழாலையில் மிகவும் அதிக மாணவர்களைக் கொண்டதும், பாலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை 18 வகுப்புகளைக் கொண்டதுமான ஏழாலை சைவ மகாஜனவித்தியாலயத்தில் பதினொரு நிரந்தர ஆசிரியர்களே உள்ளனர் சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் இப்பாடசாலையில் ஆண்டுக் கணக்காக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவேனும் நீக்கித் தருமாறு வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

இவ்வாறு வேறு சில பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களும் கல்வித் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

## நெடுந்தீவில் புதியகட்டடம்

(புங்குடுதீவு)

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாலயத்திற்கெனப் புதிய கட்டடமொன்று அண்மையில் கட்டிமுடிக்கப் பட்டுள்ளது. சுமார் ஒருலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப் பட்டுள்ளது வெகுவிரைவில் இப்புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட விருப்பதாகப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. நா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

## பாடசாலைக்கு முன்மாதிரி

(உடுப்பிட்டி)

வல்வை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

புதிய புத்தகங்கள் வராமையால் பழைய புத்தகங்களே வழங்கப்பட்டன. மேலும் பழைய புத்தகங்கள் பழைய மாணவர்களிடம் சேகரித்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டது இச்சேகரிப்புப் பணியில் அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி தலைமையிலான அபிவிருத்திச் சங்கக் குழுவினர் ஈடுபட்டனர். அனைத்துப் பாடசாலைகளுக்கும் முன் மாதிரியான இந் நடவடிக்கையைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

## தைப்பூச உற்சவம்

போண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் தைப்பூச உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 11 00 மணிக்கு அபிஷேகப் பூசை ஆகியவற்றைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருதலும் மகேசுவரர் பூசையும் இடம் பெறும்.


## வரி விளம்பரம்

### சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள் - கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம்.

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள். ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

2 மாத பொமனேரியன் வெள்ளை நாய்குட்டிகள் விற்பனைக்குள்ளன. தொடர்பு கொள்க 20/5, றக்கா ஒழுங்கை சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## பிறந்ததின வாழ்த்து

### செல்வன் ராஜ்பதி கனகராஜா



திருநெல்வேலி, காளி கோவிலடியைச் சேர்ந்த ஒவ்யா கனகராஜா புஷ்பராணி தம்பதிகளின் ஏக புதல்வன் ராஜ்பதி தனது ஏழாவது பிறந்த தினத்தை 2-2-85 சனியன்று அவரது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, வேணி அக்கா தங்கை வாணி, ப. ஜ அப்பப்மாமார், அம்மம்மாமார் அரேபியா சித்தப்பாமார், அமெரிக்கா, ஜெர்மனி மாமாமார், மாமியார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் சகோதரர்கள் உற்றார் உறவினர்கள் ஆகியோர் சகல சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகள் வழங்கினர்.


மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

05-02-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு

4—2—1985



### உதய சிந்தனை

தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற சுதந்திரத்தை, அதே தூய்மையான நேர்மையான வழிகளின் மூலமே காப்பாற்றி வரவேண்டும்

—மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23336

## இதய ஒலி

4-2-85 திங்கட்கிழமை (இரத்தாக்ஷி தை 22)

# தொண்டமானின் சுதந்திரதினச் செய்தி

இன்று நாம் வாழும் நாட்டின் சுதந்திர தினம். இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தமது இன, மத, அரசியல் பூசல்களை மறந்து 'தேசியம்' என்ற கோட்பாட்டின்கீழ் குதூகலமாகக் கொண்டாட வேண்டிய தினம் இது.

ஆனால், அப்படியான ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் இல்லை.

1958ல் உருவான கசப்புணர்வு, பரஸ்பர நம்பிக்கையின்மை என்பன இருபத்தைந்தாண்டு காலமாகியும் தீர்க்கப்படவில்லை. அதற்குப் பதிலாக பூரண வளர்ச்சி கண்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளும், உடன்படிக்கைகளும் இதய சுத்தியுடன் நடைபெற்றிருக்குமானால் பிரதமரின் வேண்டுதலின்படி தேசியக் கொடி நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் இன்று பட்டொளிவீசிப் பறந்து கொண்டிருக்கும்.

எவரும் கேட்காமலே மக்கள் தாமாக முன்வந்து தேசியக் கொடிகளை வீட்டின் முற்புறத்தில் பறக்க விட்டிருக்க மாட்டார்களா?

''தேசியம் என்றால் மீட்டர் என்ன விலை'' என்று கேட்கும் நிலைக்கு, அடுத்த பரம்பரை தள்ளப்பட்டுவிட்டது.

கத்தியின்றி யுத்தமின்றிப் பெற்ற சுதந்திரத்தை, சகல மக்களும் அனுபவிக்க முடியாது தடுப்பதற்குப் பல தந்திரங்களையும் ஆட்சிக்கு வருபவர்கள் செய்து வந்துள்ளனர்.

இதன் பயனாக அமைச்சர்களே ஒப்புக்கொள்ளும் குட்டி யுத்தமொன்று, துப்பாக்கிகள், குண்டுகள் சகிதம் உள்நாட்டில் நடைபெற்று வருகின்றது.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகிய கருத்தை வெளியிடும் சுதந்திரம் என்பவற்றிலும் மேலாக, தமிழர்கள் தம்து பாரம்பரிய பிரதேசங்களில் சுதந்திரமாக வாழவோ, நடமாடவோ முடியாத துர்ப்பாக்கிய நிலையில் ''யாருக்குச் சுதந்திரம் கிடைத்தது'' என்று இளைய தலைமுறை கேட்பதை சும்மா தட்டிக் கழித்து விடமுடியாது.

சுதந்திர தினமாகிய இன்று எமது தேசிய வீரர்கள் மனக் கண்முன்னால் வருகிறார்கள். காலி முகத்திடல் முன்னாலுள்ள பழைய பாராளுமன்றக் கட்டடத்தின் இரு மருங்கிலும் 'ஜனநாயகத்தின் காவலர்கள்' போன்று சிலையாக நிற்கும் சேர் பொன். இராமநாதன், அருணாசலம் சகோதரர்கள் பளிச்செனத் தெரிகின்றனர்.

இவர்களும் இந்நாட்டின் தேசிய வீரர்கள் என்பதை என்னும் சில தசாப்தங்களின் பின்னர் வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக் கொள்வார்களா என்பதே இன்றைய போக்கில் சந்தேகத்துக்குரியதாகி வருகின்றது.

நாட்டின் பொன்னான நாளான சுதந்திர தினத்தை ஒரு பகுதி மக்கள் கொடிகட்டிப் பறக்கவிட்டுக் கொண்டாட, இன்னொரு பகுதி கறுப்புக் கொடிகளுடன் கரிநாளாகக் கொண்டாடும் துர்ப்பாக்கிய நிலை இன்றைய நிலை.

இந்த வேளையில் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் திட்சண்யத்துடன், ஆத்ம சுத்தியுடன் நேற்று முன்தினம் எடுத்த முடிவுகளை எமது ஆட்சியாளர்கள் இன்றைய சுதந்திர தினத்தில் செயற்படுத்துவோம் என்று சபதம் கொள்ள மாட்டார்களா என்று அங்கலாய்க்கிறது சமாதானத்தை விரும்புபவர்கள் மனம்.

தமிழர் படுகொலைகள், தீ வைப்புகள், கொள்ளைகள், சித்திரவதைகள், பழிவாங்கல்கள், அத்துமீறல்களை பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ள தொழிலாளர் காங்கிரஸ், இனப்பிரச்சினையைத் தீர்க்க மூன்று ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

பாரதத்தின் பூரண ஆதரவுடன் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு தொண்டமான் விடுத்துள்ள வேண்டுகோளை ''இடப்பக்கத்தால் எடுத்து வலப்பக்கத்தால் அரசு விடக்கூடாது''

''இலங்கையின் பார்த்தசாரதி''யாக அமைச்சர் தொண்டமானை ஆட்சியாளர்கள் பயன் படுத்தினால் பிரச்சினைகள் ஒழிக்கப்பட்டு, அனைவரும் சுதந்திரமாக வாழ வழி பிறக்கும்.

இதனை இவ்வாண்டுச் சுதந்திர தினப் பிரகடனமாக எடுத்துக் கொள்வது அரசாங்கத்துக்கு நன்மையளிக்கும்; நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

## பிரதம மந்திரி வெகுண்டெழுகிறார்

# கிரேக்கத்திலிருந்து அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் நீங்கவேண்டும்

(ஏதென்ஸ்)

அமெரிக்கா கிரேக்கத்தில் இருந்து சகல அணு ஆயுதங்களையும் அகற்றி விடவேண்டும். இதற்குப் பேச்சுவார்த்தைகள் எதுவும் இருநாடுகளுக்குமிடையில் அவசியமில்லை. இது அத்தகைய ஓர் பிரச்சினையுமல்ல. கிரேக்கம் சுய இச்சையாகத் தானே தீர்மானிக்கவேண்டிய விடயம் இது. அமெரிக்க அணு ஆயுதங்கள் கிரேக்கத்தில் இருப்பது தொடர்பாக ஒப்பந்தம் எதுவும எக்கட்டத்திலும் செய்து கொள்ளப்படவுமில்லை.

இவ்வாறு கிரேக்கப் பிரதம மந்திரி திரு. பெப்பரேூ நேற்று மிக வன்மையான அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

கிரேக்கப் பாராளுமன்றம் கூட இங்கு அமெரிக்க அணு ஆயுதங்கள் இருக்கும் நிலைக்கு ஆமோதிப்புத்தெரிவிக்கவில்லை என்றும் பிரதம மந்திரி கூறியிருக்கிறார்.

பிரதம மந்திரியின் இவ்வன்மையான கண்டனம் இருநாடுகளுக்குமிடையே நெருக்கடியையும் கசப்புணர்வையும் தோற்றுவிக்கும் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

### ஆசன ஒதுக்குதல் உடன்பாடு

லோகசபாவின் எதிர்க்கட்சியான என்.டி. ஆரின் தெலுங்கு தேசம் ஆந்திர சட்டசபை தேர்தலில் பாரதீய ஜனதாவுடன் இட ஒதுக்கல் பற்றிய ஒரு உடன் பாட்டைச் செய்துள்ளது. இதன்படி ஆந்திராவில் பாரதீய ஜனதா 12 இடங்களில் போட்டியிடும்.

இதேவேளை இந்திய கம்யூனிஸ்ட்கட்சி கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட்கட்சி எனபவற்றுடனும் ஒரு உடன்பாட்டை தெலுங்கு தேசம் செய்துள்ளது. இத்தகைய ஒரு உடன்பாடு பற்றி ஜனதா கட்சியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

### மாலைதீவில் மாநாடு

(மாலைதீவு)

மாலைதீவில் பாரதம், இலங்கை, பாகிஸ்தான், பூட்டான் முதலான நாடுகள கலந்து கொள்ளும் தொழில் நுட்பவியல் ஒத்துழைப்புத் தொடர்பான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

### மசூதியருகே பயங்கர சம்பவம்

(திரிப்பொலி)

வெடி மருந்துகள் நிரம்பிய கார் ஒன்று வெடித்ததில் குறைந்தது எழுவர் கொல்லப்பட்டிருக்கலாம என திரிப்பொலியிலிருந்து அறிவிக்கப்படுகிறது. ஐம்பது பேருக்குக் கூடுதலானோர் இச்சம்பவத்தில் காயமடைந்தனர் என்றும் முஸ்லீம் பள்ளிவாசலுக்குச் சமீபமாக இச்சம்பவம் நடந்ததாகவும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தோரே பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கார் திருட்டு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் கார் திருட்டுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### எம். ஜி. ஆர். பாராட்டு

கிரிக்கெட் வரலாற்றிலே உலக சாதனையை நிகழ்த்தியுள்ள பாரத கிரிக்கட் வீரர் அசாருதினுக்கு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

''இமாலய சாதனை நிகழ்த்தி நாட்டின் பெருமையை உயர்த்தியுள்ளதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. தொடக்க நிலையிலுள்ள எல்லா கிரிக்கட் வீரர்களுக்கும் இந்தச் சாதனை எடுத்துக்காட்டாக இருக்கும்'' என அவர் குறிப்பிட்டார். இவ் வாழ்த்தினை நியூயோர்க் புறூக்கிலின் மருத்துவமனையிலிருந்தே தெரிவித்தார்.

### இறக்குமதி

(புதுடில்லி)

பாரதம் சோவியத் யூனியனிடமிருந்து ஐம்பத்தைந்து இலட்சம் தொன் கச்சாய் எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்களை இவ்வருடம் இறக்குமதி செய்யவுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை நேற்றுப் புதுடில்லியில் கைச்சாத்தானது.

### 20 கோடி மக்கள் வாக்களிப்பர்

(புதுடில்லி)

நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களில் இருபது கோடி வாக்காளர் வாக்களிக்கவுள்ளனர். தேர்தலின் போது கலவரங்கள் தோன்றாத வகையில் விழிப்புடனிருந்து செயலாற்றுமாறு தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. ஆர். கே. திரிவேதி உயரதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் வைத்து கேட்டுக்கொண்டார்.

## சீனப் பிரதிநிதிகள் குழுவினர்

# பாரத தொழில் நுட்பவியல் கண்டறிய நேரில் விஜயம்

(புதுடில்லி)

சீனாவிலிருந்து பிரதிநிதிகள் குழு ஒன்று ஒன்பது நாள் விஜயம் மேற்கொண்டு பாரதம் வந்துள்ளது.

வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை இக்குழுவினர் புதுடில்லி, பம்பாய், பெங்களூர், கல்கத்தா ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று தொழில் நுட்பங்களைப் பார்வையிடுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல்

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலுக்கென நேற்றுவரை ஐந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வேட்புமனுத் தாக்கல் கடந்த வெள்ளிக்கிழமை துவங்கியது.

மார்ச் மாதம் ஐந்தாந் திகதி இங்கு மாநிலசட்டசபைக்கான தேர்தல் நடைபெறவிருக்கின்றன.

### நிரபராதிகள் என்கின்றனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோ படுகொலை தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள முப்படைகளின் தலைவரும் மற்றும் இருபத்தைந்து பேரும் தாம் நிரபராதிகள் எனத் தெரிவித்துள்ளனர்.

### பட்டமளிப்பு விழா

(மதுரை)

மதுரைக் காமராஜ் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா இம்மாதம் பதினெட்டாம் திகதி நடைபெறவிருக்கிறது.

மாநில ஆளுநரும், பல்கலைக் கழகத் துணைவேந்தருமான திரு எஸ். எல். குரானா இவ் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

# பூட்டானில் வெளிநாடுகளின் மந்திரிகள் மே மாதம் கூடுவர்

(லண்டன்)

பூட்டானில் வெளிநாட்டமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று மே மாதத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலக சமாதானம், வல்லரசுகளின் அணு ஆயுதப் போட்டி, மற்றும் சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் மாநாட்டு இறுதியில் பொதுவான கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மூவர் கொலை

(புதுடில்லி)

மேற்கு வங்கத்தில் அரசியல் ஊழியர்கள் இருசாராருக்கு மத்தியில் உண்டான மோதலில் மூவர் கொல்லப்பட்டனர். மேலும் அறுவர் காயமுற்றனர். இது தொடர்பாக பதினொருபேர் கைதாகியுள்ளனர்

# போதைவஸ்து கடத்தல் மூவருக்கு ஆயுட்சிறை

(அங்காரா)

துருக்கியில் ஹிரோயின் போதைவஸ்து கடத்திய குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அங்காரா இராணுவ நீதிமன்றம் இத்தண்டனையை விதித்துள்ளது. இக்குற்றச்சாட்டின்பேரில் மேலும் ஐவருக்கு இருபது வருடச் சிறை விதிக்கப்பட்டுள்ளது இவர்கள் யாவரும் கடந்தவருடம் கிழக்குப்பகுதிப் பட்டணமான தியார் பேகிரில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாந்தி - (யாழ் நகர்)
12-1-85 முதல்
10.30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷணா, ராதா, தங்கவேலு நடித்த
A.V M இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

# வட்டக்கச்சிப் பெண்மணியை பிரச்சினையில் சிக்கவைத்த 'வெட்டு'

(மானிப்பாய்)

வட்டக்கச்சியிலிருக்கும் பெண்மணி யாருவர் வெளிநாடு செல்லமுன் தமது உறவினர்களைச் சந்திப்பதற்காக மானிப்பாய் வந்தாராம். மேல் நாட்டுப்பாணியில் தலைமயிரை வெட்டியிருந்த இவரைக் கண்டதும் சில இளைஞர்கள் இவர்மீது சந்தேகம் கொண்டு தம்முடன் அழைத்துச் சென்றனராம். விசாரணையின்போது இவர் தான் உள்ளூர் பிரமுகரொருவரின் உறவினர் எனக் கூறியதும் இளைஞர்கள் அப் பிரமுகரிடம் வந்து விசாரித்த போது அவர் அப்பெண் தமது உறவினர்தான் எனக் கூறியதும் அப் பெண்ணுக்கு விடுதலை வழங்கப்பட்டதாம். தனது மேல்நாட்டு தலைமயிர் வெட்டு தம்மை இக்கட்டில் மாட்டிவிட்டதேயென அப்பெண் அங்கலாய்க்கின்றார்.

## அமெரிக்காவில் எம்.ஜி.ஆர். செய்தி:

# தமிழகமக்களைகாண ஆவலாயுள்ளேன் அவர்கட்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன்

(நியூயோர்க்)

''தமிழக மக்களைக் காண மிகவும் ஆவலாயுள்ளேன். அவர்களுக்கு நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். தமிழக மக்களுக்குச் சேவை செய்யும் நாட்களை எதிர்பார்த்திருக்கிறேன்'' என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜீ. இராமச்சந்திரன் நியுயோர்க் புறூக்லின் மருத்துவ மனையில் வெற்றிகரமான மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்பின் மருத்துவ மனையிலிருந்து வெளியேறுகையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

மருத்துவமனை டாக்டர்கள் தாதிகள், ஊழியர்கள் ஆகியோருக்கும் அவர் தனது சார்பிலும் தனது மனைவி சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

முதல்வரின் இவ்வறிக்கையை அவர் சார்பில் திரு பெரியசாமி வாசித்தார் முதல்வருடன் புறூக்லின் மருத்துவமனை டாக்டர் சிறீபாதராவும் வருகிறார். ''அவசிய சிகிச்சை எதுவும் தேவைப்படாது. எனினும் பொதுவான நிலைகருதி வருகிறேன்'' என்று திரு ராவ் சொன்னார். முதல்வரை அவர் பயணமாகும் முன் பல பிரமுகர்கள் சந்தித்தனர். பாரதக் கவுன்ஸிலர் திரு கிருஷ்ணனும் மற்றும் அதிகாரிகளும் அவரை வழியனுப்பி வைத்தனர்

இன்று காலை மீனம்பாக்கம் விமான நிலயம் வரும் முதல்வர் விசேட வான் ஒன்றில் பறங்கிமலைக்கு அழைத்துச் செல்லப்படுவார். அங்கு அமைக்கப்பட்டுள்ள சிறப்பான மேடையில் அமர்ந்து அவர் மக்களின் வாழ்த்தையும், வரவேற்பையும் பெறுவார் முதல்வரால் இப்போது பலவார்த்தைகளைப் பேசமுடிகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 6-ம் திகதி வியாழக்கிழமை காலை:

# ராணுவ பொலிஸ் பாதுகாப்புடன் பஸ்ஸில் மாணவர் பேராதனை செல்வதற்கு ஒழுங்கு

யாழ்ப்பாணத்திலிருந்து ஈரற்பெரிய குளம் வரை இராணுவ பாதுகாப்புடனும், மதவாச்சி முதல் கண்டி வரை பொலிஸ் பாதுகாப்புடனும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நாளை மறுதினம் 6-ம் திகதி காலை பயணம் மேற்கொள்வர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அன்று காலை 6-45 மணிக்குப் புறப்படும் விசேஷ பஸ்ஸில் 56 மாணவ, மாணவிகள் பேராதனைக்குச் செல்லவுள்ளனர்.

மாணவருடன் யாழ்ப்பாணம் அரசாங்க செயலக பொதுஜன தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகசுந்தரமும் பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று திரும்புவார். ஆசனங்களைப் பதிவு செய்த மாணவர்களை 6-ம் திகதி காலை 6-30 மணிக்கே யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வலி. வடக்கு தபாலகங்களில் முத்திரை எதுவும் கிடையாது

(ஏழாலை)

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை முதலான வலி வடக்குப் பகுதிகளிலுள்ள தபால் நிலயங்களிலும் உப தபால் நிலயங்களிலும் முத்திரைகள் இன்மையால் பொதுமக்கள் பெரும் அவதியுறுகின்றனர்.

பல தபால் நிலயங்களில் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் எடுத்துச் செல்லப்பட்டபடியால் இத்தட்டுப்பாடு நேர்ந்துள்ளதாம். அவ்வாறே தந்திப் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. பொதுவான போக்குவரத்துச் சீர்கேடும், பாதுகாப்புப்படையினரின் அட்டகாசமும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடும் ஒருசேர இப்பகுதி மக்களை வருத்துகின்றது.

சிகரெட், மரக்கறிவகை, பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை வர்த்தகர்கள் தம் மனம் போன போக்கில் கூடுதல விலைக்கு விற்கிறார்கள்.

## ஐம்பது ரூபா . . .

—1-ஆம் பக்கத் தொடர்

ரூபா பெற்றுக் கொண்டு அவ்வப்போது முக்கிய தகவல்களைக் கொடுத்து வந்ததாகவும் கடந்த இரண்டு வருடத்தில் சுமார் 7000 ரூபாவரை தாம் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார். இந்த நபர் சில வேளைகளில் நாலகுடொலருக்கும் தகவல்களைக் கொடுத்துள்ளாரென இவரது வாக்கு மூலத்தை பதிவு செய்தநீதிபதி கூறினார்.

## வவுனியா வரை...

—1ம் பக்கத் தொடர்

வழங்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனரல் அட்டிகல மேலும தெரிவித்தார்.

தைப்பொங்கல் விடுமுறைக்குப் பின்னர் பெரும் தொகையான ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும் வவுனியாவுக்கு வெளியே உள்ள தத்தமது வேலை நிலயங்களுக்கு செல்ல முடியாது இருக்கும்நிலை ரயில் சேவை யாழ்ப்பாணத்துக்கு நடைபெறாததால் ஏற்பட்டதென அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை வவுனியாவுக்கு அப்பால் சேவையை நடாத்த அதிகாரம்பெறாததால் யாழ்ப்பாண மக்களுக்கு அனுராதபுரம்வரை நேரடியான பஸ் சேவையை நடத்த முடியாது இருப்பது பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டது

## யாழ் - பருத்தித்துறை..

— 1-ம பக்கத் தொடர்

பருத்தித்துறை வீதியில் வல்லைப் பால இரு மருங்கும் குண்டு வெடிப்புக்குள்ளானதைத் தொடர்ந்து பஸ்சேவைகள் தொண்டமானாறுப் பாதையால் மேற் கொள்ளப்பட்டு வந்தன.

நேற்று முன்தினமிரவு தொண்டமானாறு வீதியிலும் பாலமொன்று குண்டுவெடிப்புக்குள்ளானதால் சகல பருத்தித்துறை பஸ்சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டன.

இரண்டு பாதைகளில் ஏதாவது ஒருபாதை சரியான முறையில் சீர்செய்யப்படாதவரை பருத்தித்துறைக்கான பஸ் சேவைகள் ஆரம்பமாவது சாத்தியப்படாது என்று வட பிரதேசப் போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சீஸன் ரிக்கற் . . .

— 1-ம் பக்கத் தொடர்

நேற்று முன்தினம் இரவு கோண்டாவில் டிப்போவினுள் இருந்த இருபத்தைந்து எரிபொருள் 'பரல்' இனம்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. இந்த பரல்களில் இருந்தவை என்னஎன்பதுசெய்தி அச்சுக்குப் போகும் வரை தெரிவிக்கப்படவில்லை.

# பிரிட்டனின் உதவிகள் பற்றி இந்திய வானொலிச் செய்தி

(புதுடில்லி)

இலங்கை அரசு தமிழ்ப் போராளிகளுக்கெதிராக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக பிரித்தானியாவிடமிருந்து கடற்படைக்கான ரோந்துப்படகுகளையும் சிறு ஆயுதங்களையும் பெறவுள்ளதென இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வெளிநாட்டமைச்சர் ஹமீட் ஆகியோர் பிரித்தானிய மந்திரிகளுடன் நடத்தி முடித்த பேச்சுகளின் பின்னர் இச் செய்தி வெளிவந்துள்ளது.

இலங்கைக்கான ஆயுதஉதவி எதுவும் கிடையாது என பிரித்தானிய அதிகாரிகள் மறுத்துள்ள போதும் வர்த்தக அடிப்படையில் படகுகளையும் ஆயுதங்களையும் இலங்கை பெறவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஏவுகணைகளின் தொகையை குறைக்க ஒரு நிபந்தனை

(வாஷிங்டன்)

சோவியத் ரஷ்யா தரையிலுள்ள தனது பலவேறு ஏவுகணைகளின் தொகையைக் கட்டுப்படுத்தினால் அல்லது குறைத்தால் ''ஸ்டார் வார்ஸ்'' எனப்படும் விண் வெளிப்போர்த் திட்டம் மேற்கொள்ளப்பட மாட்டாது என அமெரிகக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

தற்போதும் பெரிதும் விமர்சிக்கப்படும் ஒன்றாக அமெரிக்காவின் இந்தப் போர்த்திட்டம் அமைந்துள்ளது இத்திட்டம் போன்ற ஒன்றின் ஆய்வை நீண்ட காலமாக ரஷ்யா மேற்கொண்டு வருகிறதென்றும் அதற்குப் பதிலாகவே அமெரிக்கா இந்தப் போர்த் திட்டத்தை வகுத்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

## ஆசிரியை நினைவாக

(புங்குடுதீவு)

அமரத்துவமெய்திய ஆசிரியை திருமதி புவனேஸ்வரி துரைசிங்கத்தின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் இம் மாதம் 6-ம் திகதி இங்கு கொண்டாடப்படவிருக்கிறது. இதனையொட்டி புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோவிலில் அன்று நண்பகல் விசேடபூசை, வழிபாடுகள் நடைபெறும் அதனைத் தொடர்ந்து ஏழை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், வாய்ப்பாடுகள், எழுது கருவிகள், நாட்காட்டிகள் ஆதியன இலவசமாக வழங்கப்படும்.

## மகா கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு நிருபர்)

வேலணை மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் வெகுதுரிதமாக நடைபெறுகின்றன. பல லட்சம் ரூபா செலவில் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## திடீர் சோதனை

(கல்வியங்காடு)

கல்வியங்காடுசந்தியில் நேற்றுக்காலை வந்து இறங்கியவர்கள் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். கட்டடங்கள் மீதும் மரங்கள் மேலும் இருந்து சிலர் கண்காணிக்க வீதிகளில் வந்த சகலரும் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர்.

## இவர்கள் மீது விசாரணை

யாழ் — நவீன சந்தையில் வியபாரம் செய்பவர்கள் பஸ்நிலயத்தில் நின்றவர் உட்பட சுமார் பத்துப் பேருக்கு மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## அண்ணா தினம்; இரு ஊர்வலம்

(சென்னை)

பேரறிஞர் அண்ணா தினத்தையொட்டி நேற்று அ. தி. மு.க. சார்பில் திரு. இரா, நெடுஞ்செழியன் தலைமையிலும், தி மு.க. சார்பில் கலைஞர் மு. கருணாநிதி சார்பிலும் மௌன ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. மெரீனா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதியில் மலர்வளையங்களும் வைக்கப்பட்டன.

## இஸ்லாமிய மார்கக அறிஞர் காலமானார்

இஸ்லாமிய மார்க்க அறிஞர் அல்ஹாஜ் எம். ஐ. எம் மீரான புஹாதீன் ஆலிம் அவர்கள் நேற்று அவரது இல்லத்தில். தமது எண்பத்தைந்தாவது வயதில் காலமானார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சியில் திருக்குர்ஆன் விரிவுரையாளராகவும், யாழ் - உலாமாக்கள் சபைத்தலைவராகவும் கடமையாற்றியவர். முன்னாள் வடபகுதி தப்லீஃ அமீருமான இவரது ஜனாஸா இன்று காலை சின்னப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

## துப்பாககிச் சூடு

(குருநகர்)

ஊரடங்குச் சட்டநேரத்தில் மதுபோதையில் வீதியில் உலா வந்தவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ் திடடியைச் சேர்ந்த வலேரி பிரகாசம் (40) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்.

## உணவு முத்திரை

(மன்னார்)

தற்போது அமுல்படுத்தப் பட்டு வரும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணமாக உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளது. நிவாரணமாக வழங்கப்படவுள்ள உணவு முத்திரைகள் அடங்கிய பார்சல் ஒன்று மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அச்சியற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 4-2-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.